RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22266

OPEN ACCESS

# வீரபத்தினிக்கு வழிபாடு

ஆ.பா. இராமலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்க்கலை ஆய்வகம், தென்திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-629003, தமிழ்நாடு, இந்தியா

# Worship of Veerapathini

A.P. Ramalekshmi [a, *]

[a] Department of Tamil, S.T. Hindu College, Nagercoil-629003, Tamil Nadu, India

* Corresponding Author: ramsundarav08@gmail.com

Received: 21-09-2022
Revised: 03-11-2022
Accepted: 07-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

The era of singing and praising the Lords and Kings has changed and Kannagi, protagonist of the great Tamil epic Silapathikaram, was born in an ordinary house, has been elevated to a higher level. We worship Kannaki even today, extolling the glory of this chaste queen as a deity worthy of worship, and citing the fact, that pathini means a superior person. Kannagi is a girl born in a merchant village in Bukhar town in Cholanadu. Ilangovadigal highlights the high status of this woman who was worshiped by the people and the king. Through ancient biographies, it is possible to know how a woman who came to protect her husband was raised to the status of a deity. That is why even today Kannagi brings pride to women as a deity worthy of worship.

**Keywords:** Silapathikaram, Worship, Ilangovadigal, Kannagi

## முன்னுரை

சோழநாட்டில் புகார் நகரத்தில் வணிகக்குலத்தில் பிறந்த பெண்ணாக கண்ணகி திகழ்கிறாள். இப்பெண்ணை மக்களும் மன்னனும் தொழுது வணங்கிய உயர்வுநிலையை இளங்கோவடிகள் எடுத்துக்காட்டுகிறார். பண்டைய வாழ்வியலில் மனையறம் காக்க வந்த ஒரு பெண் எவ்வாறு வாழ்ந்து தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளாள் என்பதையும், “தெய்வம் தொழும் நல்லாள்” என்பதை அறியமுடிகிறது. அதனால்தான் இன்றளவும் வழிபாட்டிற்குரிய தெய்வமாக பெண்ணினத்திற்கே பெருமை சேர்க்கிறாள் கண்ணகி.

## வாழ்வியல் நெறி

கோவலன் ஆடல் மங்கை மாதவியோடு சிலகாலம் வாழ்ந்த போது, கண்ணகி எந்த விதமான அலங்காரங்களையும் மேற்கொள்ளவில்லை. அவர்களுக்கான அத்தனை செல்வங்களையும் இழந்த நிலையிலும் கணவனின் வருகைக்காக காத்திருந்தாள். மேலும் தன் தவறை புரிந்துக் கொண்டு மீண்டும் கண்ணகியோடு வாழ வந்தபோதும் நடந்ததைப் பற்றிப் பேசாமல் அவர்களது வாழ்வு செழிக்க, இழந்த பொருட் செல்வத்தை மீட்டெடுக்கவும் மதுரைக்குப் புறப்பட்டதையும் அறியமுடிகிறது. இச்செயலானது பெண்ணின் பொறுமையே எடுத்துக்காட்டுகிறது.

## மண்ணுலக அருந்ததி

கண்ணகியின் தோழி தேவந்தி சோமக்குண்டம், சூரியக்குண்டத்தில் நீராடி காமதேவனை வழிபட்டால் உன் கணவனோடு சேர்ந்து வாழலாம் என்ற வழிபாட்டு நெறியைக் கூறியபோதும் கூட "என் கணவனே எனக்குத் தெய்வம்" என்று கூறுகிறாள். அதனால், தான் வானுலகத்தில் கற்புகரசியான அருத்ததிக்கு இணையாக மண்ணுலகத்திலும் போற்றப்படுகிறாள்.

## வீரப்பெண்

பிழைப்பிற்காக தனது மனைவியின் ஒற்றைக்கால் சிலம்போடு வந்த கோவலனை கள்வன் எனவும், பாண்டியனின் மனைவி பாண்டிமாதேவி சரி செய்ய கொடுத்த சிலம்பினைத் திருடியவன் இவன் என கொல்லன் பொய்யுரை உரைக்க, அவற்றை சரியாக ஆராயாது நீதி வழங்கியதன் விளைவே கோவலன் கொல்லப்படுகிறான். இச்செய்தியினை அறிந்த கண்ணகி, அரசவைக்கு வருகின்றாள் வாயில் காவலன் இவளது முகத்தைப் பார்த்து,

"பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி

வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்

அறுவர்க் கிளைய நங்கை இறைவனை

ஆடல்கண்டு அருளிய அணங்கு சூருடைக்

கானகம் உகந்த காளி தாருகன்

பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்"

என்று அரசனிடம் கூறினாள் (Puliyur Kesigan, 1958).

கொற்கை மன்னன் நீ யார் என்று வினவ, அதற்கு கண்ணகி சோழநாட்டின் பெருமையை கூறி, எனது கணவன் கோவலன் என உரக்கக் கூறினாள். மன்னனின் குற்றத்தை எடுத்துக்காட்டியவளாய், "உண்மையை நிலைநாட்ட வந்த நீதி தேவதையாகத் திகழ்கிறாள். தன் தவறை ஒத்துக் கொண்ட பாண்டியனும் கோப்பெருந்தேவியும் உயிர்த் துறந்ததை அறியமுடிகிறது. மன்னன் சிறந்தவனாக இருந்தாலும் ஊழ்வினைக் காரணமாக இச்செயல் நடந்ததையும் மதுரை நகரத்து காவல் தெய்வத்தின் மூலம் அறியமுடிகிறது.

## தெய்வங்கள் தொழுத நல்லாள்

அக்னி கடவுள், மதுராபுரித் தெய்வம் நால்வகை பூதங்கள் என காவல் தெய்வங்கள் அத்தனையும் பணிந்தன.

"மாமகளும் நாமகளும் மாயிடம் செற்று கந்த

கோமகளும் தாம் படைத்த கொற்றத்தாள்" (Puliyur Kesigan, 1958)

மதுராபுரித்தெய்வம், கண்ணகியின் முற்பிறப்பு வரலாற்றை எடுத்துக் கூறியது. தீ கடவுள் கண்ணகியின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நின்றதையும் நால்வகை பூதங்கள் வீரப் பெண்ணுக்கு உதவி செய்ததிலிருந்து உண்மைக்குத் தெய்வமும் இறங்கி வரும்" என்பதை உணர்த்திய பெண்ணாகத் திகழ்க்கின்றாள். மேலும், கண்ணகி கணவன் மீது கொண்ட உண்மையான அன்பு கோவலனோடு வானுலகத்திற்கும் அழைத்து சென்றதை,

"அமரர்க் கரசன் தமர் வந்தேத்தக்

கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு

வானவூர்தி ஏறினள் மாதோ

கானமர்புரி குழல் கண்ணகி தானென்" (Puliyur Kesigan, 1958)

இப்பாடல் வரிகள் மூலம் எடுத்துக்காட்டுகிறது.

## நடுகல் அமைத்தல்

வீரர்களுக்கு நடுகல் அமைத்து வழிபடுவது போன்று சாதாரண குடியில் பிறந்த கண்ணகிக்கும் சேரமன்னன் செங்குட்டுவன், வனசாரினி வேண்டுதலுக்கு ஏற்ப இமயத்திலிருந்து கல்லெடுத்து பத்தினியான வீரத்தாய்க்கு சிலை வைத்து பெருமை சேர்க்கிறான்.

"தென் தமிழ்ப்பாவை செய்த தவக்கொழுந்து

ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய

திருமா மணியெனத் தெய்வமுற்று உரைப்ப" (Puliyur Kesigan, 1958)

மேலும்,

"இவள் போலும் நல் குலத்தோர்

இருந்தெய்வம் இல்லை" (Puliyur Kesigan, 1958)

என்று புகழாரம் சூட்டி காவல் தெய்வமாக வணங்கியதை அறியமுடிகிறது.

## உலகியல் உண்மை

நம் மண்ணில் தோன்றிய கண்ணகிக்கு சிலை அமைத்து வழிபட்ட அரசரின் பெருமையை மட்டும் சிலம்பு கூறவில்லை. நாட்டை ஆளும் மன்னன் நீதி தவறினால் மானிட உருவில் கடவுள் வந்து தண்டனை வழங்கும் என்பதையும் இக்காவியம் எடுத்துக் காட்டுகிறது. மேலும் இத்தெய்வத்தை போன்று ஏராளமான பெண் காவல் தெய்வங்கள் தங்களையும், தங்கள் குலத்தையும், பெண்ணியத்தையும் காப்பாற்றுவதற்காக தெய்வமாக நின்றதோடு மட்டுமல்லாமல் மரபு ரீதியான வழிபாட்டையும் காலம்காலமாக பின்பற்றி வருகின்றார்கள். அவர்கள் தெய்வமாக வழிபடுவதற்கான காரண காரியத்தை கதையாகவோ, கதைப்பாடல்கள் மூலமாகவோ அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லுவதையும் காணலாம். கணவனைக் கண்கண்ட தெய்வமாகத் தொழுததை,

"தெய்வந் தொழுஅள் கொழுநற் றொழுவாளைத்

தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால் - தெய்வமாய்

மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி

விண்ணகமா தர்க்கு விருந்து" (Puliyur Kesigan, 1958)

என்ற வரிகள், விண்ணுலகத்திலும், மண்ணுலகத்திலும் போற்றப்பட்ட மங்கலம் மடந்தையாக விளங்குகின்றாள்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை"

கற்பின் பெருமையை வள்ளுவரும் எடுத்துக் கூறுவதையும் அறியலாம். மேலும்,

"பத்தினி கடவுளை பரசல் வேண்டும்"

எடுத்துக்காட்டுகிறது (Puliyur Kesigan, 1958).

## பெண்ணினத்திற்கு வழிகாட்டி

திருமகள் போன்று வடிவம் கொண்ட கண்ணகி பொறுமையுடையவள். மென்மையானவள் என்றாலும் தன் கணவனுக்கு தீங்கு என்று வந்த போது, தீங்குக்கான உண்மையை ஆவணங்களோடு உலகமறிய செய்கிறாள். காலம்காலமாக ஒரு பெண் ஆணுக்கு கொடுக்கும் அன்பையும் மரியாதையும் அறச்சிந்தனையோடு, தமிழ் பெண்ணுக்குரிய மரபாகவே இந்த அறக்காப்பியம் எடுத்துக்காட்டுகின்றது. பாண்டியனது அரசாட்சியில் நீதி தவறியதால், குற்றத்தை உணர்ந்து உயிர் பிரிந்த மன்னனோடு கோப்பெருந்தேவியும் விழுந்தது இறந்தது பெண்ணின் முதல் தலைக்கற்பாகும்.

கணவன் இறந்ததும் மனைவி உயிரைவிடுதல் பண்டைய தமிழர் வாழ்வியலில் ஒரு மரபாகவே பின்பற்றப்படுகிறது. இந்த மரபு பின்பற்ற படவில்லையெனில் பெண்ணுக்கு வழிபாடு இல்லை. ஏதோ ஒரு மூலையில் பெண்ணானவள் தீப்பாச்சி அம்மன், சுமைத்தாங்கி கல், நல்லத்தங்காள், நீலி, காளி இப்படி வாழ்ந்துக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதற்கான அடையாளமே பெண் தெய்வங்களின் வழிபாடு ஆகும் என்பதையும் இக்காப்பியம் உணர்த்துகிறது.

## கண்ணகி கோட்டம்

குன்ற குறமகள், மலைவளம் காணவந்த சேரனிடமும் அவனது மனைவியான வேண்மாளிடம் பத்தினி பெண்ணுக்கு சிலை வழிபாடு செய்ய சொன்னதை நிரூபிக்கும் வகையில் “மங்கலதேவி கண்ணகி கோட்டம்” என்னும் நூலில் கண்ணகியின் வழிபாடு ‘மங்கலதேவி’ என்ற பெயரில் கூடலூரில் வழிப்படுவதை எடுத்துக்காட்டுகிறது. கணவனோடு வானுலகத்திற்கு சென்றதால் இவளுக்கு ‘மங்கல தேவி’ என்று ஊர்மக்கள் அழைப்பதையும் அறியலாம். மேலும், இவ்வழிபாட்டின் முக்கிய நோக்கம் இப்பெண்ணுக்கு நடந்த அவலமும் அதனால் அவளுக்கு ஏற்பட்ட மன உளைச்சல் நீதிக்காகவும் கணவனுக்காகவும் போராடி தேவர்களின் ஆசியோடு பதினான்காவது நாள் கோவலன் வானுலகத்திற்கு அழைத்து சென்றதை,

“தலைவனை வானோர் தமராரும் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும் யாம்”

வரிகள் மூலம் அறியலாம். இப்படி ஒரு நிகழ்வு இனி யாருக்கும் நிகழ கூடாது என்பதே வழிபாட்டின் அடிப்படை நோக்கமாகும். ‘மங்கல மடந்தை’ என்று சிலம்பு சூட்டிக்காட்டிய மங்கலதேவியும் இவளே என்றும், இக்கோவிலில் அம்மன் அருள் வந்தவர் வாக்கு கூறும் போது அவருடைய கையில் தாலியும் சிலம்பும் வைத்திருப்பதாக டாக்டர் துளசி இராமசாமி குறிப்பிட்டு சொல்லுகிறார் (Ramasamy, 1987).

“அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
மங்கல அணியின் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாள் நுதல் திலகம் இழப்பத்
தவள வாள்ககை கோவலன் இழப்ப

மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்

கையறு நெஞ்சத்துக் கண்ணகி" (Puliyur Kesigan, 1958)

என்பது பாடல் பகுதி, மாதவியோடு வாழ்ந்த போதும் சரி, கணவனைப் பிரிந்த கண்ணகியாக வாழ்ந்த போதும் சரி ஏறத்தாழக் கைம்பெண்வாழ்க்கையே வாழ்ந்தாள். ஆனால் அவள் அணிந்திருந்த மங்கலநாண் (தாலி) ஒன்றே அவள் நன்மங்கலி என்பதை அறிவித்துக் கொண்டிருந்தது அதனால் தான் மங்கலதேவி என்று அழைத்திருக்கலாம் என்பதையும் அறியமுடிகிறது.

பேராசிரியார் அ.கா.பெருமாள் அவர்கள் 'தெய்வங்கள் முளைக்கும் நிலம்' என்ற நூலில் நாட்டுப்புறப்பாடல்களில் நாட்டார் தெய்வமாக கண்ணகி பல இடங்களில் இன்றளவும் மண்ணில் போற்றப்பட்டு வருவதையும் எடுத்து கூறுகிறார் (Perumal, 2003). மேலும் கேரளாவில் ஆற்றுக்கால் பகவதியை கண்ணகி என்றும், இலங்கையில் மட்டக்களப்பு பகுதியிலும் கண்ணகிக்கு வழிபாடு நடைபெறுவதை அறியமுடிகிறது.

## முடிவுரை

கண்ணகி கணவனை கண்கண்ட தெய்வமாக தொழுதவள். இல்லற நெறி, கற்பு நெறி, உடையவள் என்பதால் தெய்வங்கள் வணங்கியது. இவளை காணும் பிற பெண்களும் தெய்வ பெண்ணாகப் போற்றினார்கள். மன்னனும், மக்கள் வழிபட நல்லாளுக்குச் சிலை அமைத்தான். பெண் உயர்வு நிலையிலிருந்து தெய்வநிலைக்கு எடுத்து செல்லப்பட்டு இன்றளவும் கண்ணகியானவன் காவல் தெய்வமாக நம் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்

## References

Perumal, A.K. (2003) Theivangal Mulaikum Nilam, New Century Book House, Chennai, India

Puliyur Kesigan, (1958) Silappathikaram, Pari Nilayam, Chennai, India

Ramasamy, T. (1987) Mangaladevi Kanni Kottam, International Institute of Tamil Studies, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License